## 21.7 ஊரக சாலைகள் பராமரித்தல்

ஊரக வளர்ச்சி (சி2) துறை

அரசாணை (நிலை) எண்.24 நாள் : 02.04.2000

படிக்க :

1. ஊரக வளர்ச்சி இயக்குநர், கடிதம் நக.எண்.37952/99/டியு–1, நாள்.13.5.99.

**ஆணை**

ஊராட்சி சாலைகள் பராமரிக்க நிதி ஒதுக்கீடு செய்வது குறித்து அமைச்சரவை கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

2. 1999 –2000ம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டின்படி உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.381.6011 கோடியாகும். இந்நிதியினை 47:45:8 என்ற விகிதத்தில் முறையே கிராம ஊராட்சிகளுக்கு ரூ.179.3525 கோடியும், ஊராட்சி ஒன்றியங்களுக்கு ரூ.171.7205 கோடியும் மாவட்ட ஊராட்சிகளுக்கு ரூ.30.5281 கோடியும் பிரித்து 05.07.99 நாளிட்ட அரசாணை நிலை எண்.120–ல் ஆணை வெளியிடப்பட்டது. பிரித்தளிக்கப்பட்ட இத்தொகையினை அந்தந்த ஊரக உள்ளாட்சி அமைப்புகள் தங்களின் பொது நிதியில் சேர்த்து ஊராட்சிகள் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தங்களது அன்றாட பணிகளுக்கு செலவிடப்படவேண்டும். ஒதுக்கப்பட்ட தொகையிலிருந்து உள்ளாட்சி அமைப்புகள் ஒரு குறிப்பிட்ட தொகையினை சாலைகள் பராமரிப்பு பணிகளுக்கு ஒதுக்கீடு செய்வது குறித்து ஊரக வளர்ச்சி இயக்குநரின் அறிக்கை கோரப்பட்டது.

3. ஊரக வளர்ச்சி இயக்குநர் தனது அறிக்கையில் ஊரக சாலைகளை பராமரிக்க ரூ.296.27 கோடி தேவைப்படும் எனவும், இத்தொகையினை ஊராட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட நிதியிலிருந்து ஒதுக்க இயலாது என தெரிவித்துள்ளார்.

4. இந்நிலையில் ஊரக வளர்ச்சி இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமாக ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

1) நெடுஞ்சாலை துறையினரால் ஊரக கட்டமைப்பு வளர்ச்சி நிதித் (Rural Infrastructure Development Fund) திட்டத்தின் கீழ் எடுத்து மேம்படுத்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய சாலைகளை இனி ஊராட்சி ஒன்றியங்களே தங்களது நிதியினைத் கொண்டு பரிந்துரைக்கப்பட்ட தொழில்நுட்ப தரத்தினையும் வழிமுறைகளையும் பின்பற்றி பராமரிக்கப்படவேண்டும்.

2) நெடுஞ்சாலைத் துறை மேற்படி சாலைகளை பராமரிப்பதற்கான தொழில் நுட்ப அளவுகள், வழிமுறைகள், அளவு கோல்கள், தரம் மற்றும் வழிக்காட்டும் முறைகளை அளிக்கும்.

3) நெடுஞ்சாலைத் துறையால் ஊரக கட்டமைப்பு வளர்ச்சி நிதித் திட்டத்தின் கீழ் இது வரை மேம்படுத்தப்பட்ட மாவட்ட மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் வாரியான சாலைகள் அவற்றின் பெயர்கள் அமைந்த கிராமம், ஊராட்சி ஒன்றியம், முடிக்கப்பட்ட வருடம், செய்யப்பட்ட முதலீடு, தொழில்நட்ப அளவுகள் மற்றும் சம்பந்தப்பட்ட விவரங்கள் ஊரக வளர்ச்சி துறைக்கும் மற்றும் அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் அளிக்க வேண்டும்.

4) மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மேற்படி விவரங்கள் அடங்கிய சாலைகளின் பட்டியலை தொடர் பராமரிப்பிற்காக அந்தந்த ஊராட்சி ஒன்றியங்களுக்கு அளிக்கப்படவேண்டும்.

5) மேற்கூறிய மேம்படுத்தப்பட்ட சாலைகளை நெடுஞ்சாலைத் துறையே பராமரிக்க வேண்டும் என ஊராட்சி ஒன்றியங்கள் கருதினால் இது குறித்து ஊராட்சி ஒன்றிய குழுவில் தீர்மானம் இயற்றப்பட்டு பராமரிப்பிற்கான தொகையை ஊராட்சி ஒன்றியங்கள் தங்கள் நிதியிலிருந்து முன்னதாகவே நெடுஞ்சாலைத் துறைக்கு வழங்க வேண்டும்.

5. இவ்வாணை நிதித் துறை அ.சா.எண்.7111/ஆர்டி/2000, நாள்.09.01.2000 மற்றும் நெடுஞ்சாலைத் துறை,அ.சா.எண்.1122/எச்என்1/2000, நாள்.27.01.2000 ஆகிய துறைகளின் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரமேஷ் சந்திர பண்டா**
அரசு செயலர்